**கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 29 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 02 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 19 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் 2014 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 2 இன் பிரகாரம் அது முறையாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா.13,000 தொகையான கணக்காய்வுக் கட்டணம் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 பெறப்பட வேண்டிய கணக்குகள்.

வேலையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களின் ரூபா.226,977 தொகையான கடன் நிலுவையை அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2011 ஆம் ஆண்டிலிருந்து தொடர்சியாக நிதிகூற்றுக்களில் கொண்டுவரப்படுகின்றது.

#### 1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| காணிகளும்,கட்டடங்களும் | 81,562,259 | காணி உடைமைப்பத்திரம் |
| பொறித் தொகுதிகள் இயந்திரங்கள் | 577,500 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| தளபாடங்கள் | 650,793 | |
| நூல் நிலையபுத்தகங்கள் | 632,482 | |
| கணனி | 199,649 | |
| புகைப்படக் கருவி | 24,500 | |

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | விடயங்கள் |
|---|---|
| 1988 பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள். | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் என்பவை நான்கு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமை மாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஓவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் X இன் பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான காரணங்கள் விளக்கங்கள் உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2 நிதிமீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.2,415,575 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடியவருமானம் ரூபா.5,419,091 ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா.3,003,516 வீழ்ச்சியினைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமானவிடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | வேறுபாடு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | % |
| வீதவரிகள் | 625 | 2 | 623 | 99 |
| வாடகை | 800 | 416 | 384 | 48 |
| சேவைகளுக்கானகட்டணம் | 285 | 60 | 225 | 78 |
| பற்றானைச் செலவு, தண்டப்பணம் | 3,775 | 3,117 | 658 | 17 |
| ஏனைய வருமானம் | 1,708 | 1,110 | 598 | 35 |

#### 2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ளகாணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது வீதவரிகள் அறவீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆண்டுப் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததினால் சபை வருடாந்தம் அண்ணளவாக ரூபா.500,000 வருமானத்தை இழந்துள்ளது.

#### 2.2.3 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான கட்டண அறவீடு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தில் 126 ஆம் பிரிவிற்கு அமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் தொலைத்

தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 06 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு நிறுவுதல் கட்டணம் மற்றும் வருடாந்த உரிமம் என்பவற்றை அறவிட முடியாமையால் சபை அண்ணளவாக ரூபா.500,000 வருமானத்தை வருடாந்தம் இழந்துள்ளது.

### 2.2.4 கட்டிட வாடகை

சபையினால் மக்கள் வங்கிக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட கட்டிடத்திற்கு 2009 ஆம் ஆண்டு தொடக்கம் அறவிடப்பட வேண்டிய ரூபா 500,000 தொகையான வாடகைப் பணம் மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை வங்கியில் ஆரம்பிக்கப்பட்ட நடைமுறைக் கணக்கு 10 வருடங்களுக்கு மேலாக செயலற்று (Dormant) காணப்படுகின்ற போதிலும், இக்கணக்கை மூடி ரூபா.117,714 மீதியை வேறுகணக்கிற்கு மாற்றுவதற்கு சபையால் இத்திகதிவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 15 மோட்டார் வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 22% தொடக்கம் 80% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒருவினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

## 5 முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு